**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**சென்னை – 600 025.**

**இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)**
**முதலாம் ஆண்டு – முதற்பருவம்**

**நேரடி எழுத்துத் தேர்வு (OFFLINE WRITTEN EXAMINATION)**

**ஜனவரி – பிப்ரவரி 2023**

**C012 இடைக்கால இலக்கியம்**

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு: பிரிவு – 1 இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

**பிரிவு – 1**

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. இன்னா நாற்பதில் எத்தனை இன்னாத கருத்துகள் இடம்பெற்றுள்ளன?
2. நான்மணிக்கடிகை நூலின் ஆசிரியர் யார்?
3. அழகும் இளமையும் --------------- கெடும்.
4. எந்த நாளில் மரங்களை வெட்ட மாட்டார்கள்?
5. கைப்பொருளை விட சிறந்த மெய்ப்பொருள் எது?
6. மூதுரையின் கடவுள் வாழ்த்தில் போற்றப்பட்டுள்ள கடவுள் யார்?
7. கல்வியைத் தொடங்கும் போது எப்படி இருக்கும்?
8. அனைவருக்கும் தெய்வமாகக் குமரகுருபரர் யாரைக் குறிப்பிட்டுள்ளார்?
9. திருக்குற்றாலக் குறவஞ்சியின் ஆசிரியர் யார்?
10. குறத்தியின் கணவன் பெயர் யாது?
11. கோவை இலக்கியத்தின் மற்றொரு பெயர் யாது?
12. கோவை நூல்களில் முதலில் வைத்துக் கூறப்படும் நூல் எது?
13. பிள்ளைத்தமிழ்ப் பருவங்களின் எண்ணிக்கை எவ்வளவு?
14. முக்கூடற்பள்ளுவின் காலம் எது?
15. தண்டலையார் சதகத்தின் முழுப்பெயரைக் குறிப்பிடுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

1. சிறுபஞ்சமூலம் கூறும் ஐந்து உறுதிப் பொருள்கள் யாவை?
2. 'சிறந்த பத்து' அதிகாரத்தின் பெயர்க் காரணத்தைக் குறிப்பிடுக.
3. மனித வாழ்க்கைக்கு அடிப்படையானவர் என்று உலக நீதி யாரைக் குறிப்பிடுகிறது?
4. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் நூல் அரங்கேற்றத்தின் போது நிகழ்ந்த அற்புதம் யாது?
5. திருக்குற்றாலக் குறவஞ்சியில் கடவுள் வணக்கம் யார் மீது பாடப்படுகிறது?
6. சிலர் இன்பத்தை விட்டு விட்டு வீட்டைத் தேடி அலைவர் என்பதற்குச் சிறிய திருமடல் கூறும் உவமை யாது?
7. பள்ளியர் ஏசலில் சமயம் எவ்வாறு இடம்பெற்றுள்ளது?
8. தண்டலையார் சதகம் குறிப்பிடும் உயர்ந்த பண்புகள் யாவை?

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

1. (அ) கற்றுக்கொள்ள வேண்டிய நெறிகளாக ஆசாரக்கோவை கூறுவனவற்றைத் தொகுத்துரைக்க.

   (அல்லது)

   (ஆ) இலக்கியங்களில் பழமொழிகள் இடம்பெற்றுள்ளன என்பதைச் சான்றுடன் விளக்குக.

2. (அ) கல்விக் குறித்து நன்னெறி கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக.

   (அல்லது)

   (ஆ) சிற்றிலக்கியப் பாகுபாடுகள் குறித்துக் கட்டுரை வரைக.

3. (அ) முக்கூடல் நகர்ச் சிறப்புப் பற்றி எழுதுக.

   (அல்லது)

   (ஆ) உலாவின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து விளக்குக.

***